தினமணி

**நெல் விலை சரிவு: விவசாயிகளுக்கு நஷ்டம்**

First Published : 29 Jun 2010 12:04:15 PM IST

Last Updated : 29 Jun 2010 12:29:41 PM IST

ராஜபாளையம், ஜூன் 28: கோடை நெல் அறுவடையில் வறட்சியால் நெல் மகசூல் குறைந்துள்ளதோடு, விலையும் சரிவடைந்துள்ளதால், விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர்.

ராஜபாளையம், சிவகிரி வட்டாரப் பகுதியில் கோடை நெல் நடவு மூன்று மாதங்களுக்கு முன் மேற்கொள்ளப்பட்டது. கர்நாடகா பொன்னி, ஜெ.ஜெ.எல், அதிசய பொன்னி, கோமல், சோனால் போன்ற சன்ன ரக நெல் அதிகம் நடவு செய்யப்பட்டிருந்தன.

இவை, தற்போது அறுவடையாகி வருகிறது. போதிய மழையின்மையால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு, ஏக்கருக்கு 30 மூட்டை கிடைக்க வேண்டிய வயலில், 10 மூட்டை நெல் மட்டுமே கிடைத்துள்ளது.

இந்நிலையில், நெல் விலையும் கடுமையாக சரிவடைந்துள்ளதால், விவசாயிகள் பெரும் நஷ்டமடைந்துள்ளனர். கடந்த மாத ஆரம்பத்தில் 70 கிலோ நெல் மூட்டை ரூ. 950 வரை விற்கப்பட்டது. ஆனால் தற்போது, கர்நாடகா பொன்னி, ஜெ.ஜெ.எல், கோமல் போன்ற சன்ன ரக நெல் மூட்டையின் விலை ரூ. 650 ஆக சரிவடைந்துள்ளது.

மேலும் வியபாரிகள், திருச்சி-1, அம்பை-16 போன்ற ரக நெல்களை மட்டுமே விரும்பி வாங்கிச் செல்கின்றனர். இதனால், பெரும்பாலான விவசாயிகள் அறுவடை செய்யப்பட்ட சன்ன ரக பொன்னி நெல் மூட்டைகளை, குடோனில் இருப்பு வைத்துள்ளனர்.

விவசாயத் தொழிலாளர்களின் கூலி உயர்வு, உரம் இடுபொருள்களின் விலை உயர்வு, உழவுக் கட்டணம் அதிகரிப்பு ஆகியவற்றால் விவசாயிகளுக்கு செலவு அதிகரித்துவரும் நிலையில், தமிழக அரசு நெல் விலையை குவிண்டாலுக்கு ரூ. 1,300 முதல் ரூ. 1,500 வரை உயர்த்தி

**டிஆர்ஒய்-3 ரக விதை நெல் பயிரிட விவசாயிகளுக்கு அழைப்பு**

First Published : 29 Jun 2010 11:19:02 AM IST

Last Updated : 29 Jun 2010 12:32:47 PM IST

திருச்சி, ஜூன் 28: நிகழாண்டில் அறிமுகம் செய்யப்பட்ட டிஆர்ஒய்-3 ரக விதை நெல்லை பயிரிட விரும்பும் விவசாயிகள் அணுகலாம் என்றார் திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் ஜி. கதிரேசன்.

இதுகுறித்து அவர் திங்கள்கிழமை அளித்த பேட்டி:

"கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும், திருச்சி வேளாண்மைக் கல்லூரியும் இணைந்து "டிஆர்ஒய்-3' என்ற புதிய ரக நெல்லை நிகழாண்டில் அறிமுகம் செய்துள்ளது. மற்ற ரக நெல்களைவிட இந்த ரக விதை நெல்லில் அமிலேஷ் அதிகமாகக் காணப்படுவதால் இட்லி தயாரிக்கப் பயன்படுத்தலாம். சம்பா, பின் சம்பா, தாளடிக்கு இந்த ரக நெல் மிகவும் உகந்தது. 135 நாள் வயதுடைய இந்த நெல் நல்ல பயனைத் தரும்.

சாதாரண சாகுபடியில் ஒரு ஹெக்டேருக்கு 5,835 கிலோ நெல் விளைச்சலும், செம்மை நெல் சாகுபடி மேற்கொண்டால் ஹெக்டேருக்கு 10,500 கிலோ நெல் விளைச்சலும் கிடைக்கும்.

களர் மற்றும் உவர் மண் பகுதிகளில் இந்த ரக விதை நெல்லைப் பயிரிட்டு பயனடையலாம். மற்ற ரக நெல்களைவிட இவை 10.8 சதம் அதிக மகசூல் தரும். அரிசி அரைவைத் திறன் 71.3 சதமாகும். முழு அரிசி அரைவைத் திறன் 66 சதமாகும். கடந்த 12 ஆண்டுகள் நடைபெற்ற ஆராய்ச்சிக்குப் பிறகு இந்த நெல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஆராய்ச்சி மையத்தில் விளைவிக்கப்பட்ட நெல்லை சென்னை, மதுரையில் உள்ள பிரபலமான இட்லி கடைகளில் கொடுத்து பரிசோதித்துப் பார்த்தோம்.

மற்ற ரக அரிசியைப் பயன்படுத்தி இட்லி தயாரிப்பதைவிட டிஆர்ஒய்-3 ரக அரிசியைப் பயன்படுத்துவதால் 10 சதம் கூடுதலான மென்மையாக இருப்பதாக அந்த உணவகங்களின் உரிமையாளர்கள் சான்று அளித்துள்ளனர்.

தற்போது காவிரி டெல்டா பகுதியில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் இந்த நெல்லை கொண்டு செல்ல ஏற்பாடு செய்துள்ளோம். டிஆர்ஒய்-3 ரக நெல் பயிரிட விரும்புவோர் அந்தந்த ஊராட்சி ஒன்றிய வேளாண்மை அலுவலரைத் தொடர்புகொண்டு விதை நெல்லைப் பெற்றுக் கொள்ளலாம்' என்றார் அவர்.

**தோட்டக்கலை பயிரிடும் பரப்பளவை அதிகரிக்க விவசாயிகள் வலியுறுத்தல்**

First Published : 29 Jun 2010 12:04:37 PM IST

Last Updated : 29 Jun 2010 12:29:46 PM IST

மதுரை, ஜூன் 28: மதுரை மாவட்டத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் விவசாயிகள் அதிகம் பயன்பெறும் வகையில் மரக்கன்றுகளை வழங்கியும், பயிரிடும் பரப்பளவை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

விவசாயிகள் பயன்பெறும் வகையில் அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. சில ஆண்டுகளாக மழை இல்லாத நிலையில் நீர் ஆதாரம் குறைந்து வருகிறது. அதனால் விவசாயிகளால் அதிக அளவு பயிரிட முடியாத நிலை ஏற்பட்டது. அப்படியே பயிரிட்டாலும் உற்பத்தி எதிர்பார்த்த அளவு கிடைக்காத நிலை இருந்தது.

அதனால் விவசாயிகள் கடனாளிகள் ஆகும் நிலை ஏற்பட்டது. விவசாயிகளின் கிணறுகளில் இருக்கின்ற நீர்வளத்தைப் பயன்படுத்தி, தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் வீரிய ஒட்டு ரக மாங்கன்று, சப்போட்டா, எலுமிச்சை, நெல்லி, கோகோ, நாவல், முந்திரிக்கொட்டை உள்ளிட்ட மரக் கன்றுகளை வளர்க்கும் திட்டம் தமிழகத்தில் 2005-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டம் டி.கல்லுப்பட்டி, சேடபட்டி, அலங்காநல்லூர், உசிலம்பட்டி, திருமங்கலம், கொட்டாம்பட்டி, கள்ளிக்குடி, மதுரை கிழக்கு, திருப்பரங்குன்றம், வாடிப்பட்டி, அலங்காநல்லூர் உள்பட 13 வேளாண் வட்டார அலுவலகங்கள் மூலம் தீவிரமாகச் செயல்படுத்தப்படுகின்றன.

இக்கன்றுகளை வளர்க்க ஆண்டுதோறும் விவசாயிகளுக்கு மானியம் அளிக்கப்படுகிறது. முதல் ஆண்டில் ரூ.10,500, 2-ம் ஆண்டில் ரூ.4,500, 3-ம் ஆண்டில் ரூ.6,750 மதிப்பில் ரொக்கம் இல்லாமல் உரம் மற்றும் இடுபொருள்களாக வழங்கப்படுகிறது.

இக்கன்றுகள் அனைத்தும் விரீய ஒட்டு ரகத்தைச் சேர்ந்தது. இதனால் விரைவில் காய்ப்புக்கு வந்து விடும். எனவே விவசாயிகள் உரிய பலன்களைப் பெற முடியும்.

இத்திட்டத்தின் மூலம் அலங்காநல்லூர், வாடிப்பட்டி, சோழவந்தான், கொட்டாம்பட்டி, பேரையூர், சுப்புலாபுரம், பூஞ்சுத்தி ஆகிய பகுதிகளில் மரக்கன்றுகள் நன்கு வளர்ந்து காய்ப்புக்கு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் பயனடையும் விவசாய நிலப் பரப்பளவு ஆண்டுதோறும் குறைந்து வருகிறது. 2009-10-ல் தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் 3,714 ஹெக்டேர் பரப்பளவில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. அதற்கு மானியமாக ரூ.3.50 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2010-11-ம் ஆண்டுக்கு 3,389 ஹெக்டேர் பரப்பளவுக்கு ரூ.3.57 கோடியில் திட்ட ஒதுக்கீட்டுக்கு அனுப்பி உள்ளனர். இது கடந்த ஆண்டை விடக் குறைந்த பரப்பளவு ஆகும்.

இத்துறை மூலம் மரம் வளர்க்கும் திட்ட நிலப்பரப்புகளை அதிகரிக்க வேண்டும் என்பதே விவசாயிகளின் எதிர்பார்ப்பு ஆகும்.

**வேளாண் வளர்ச்சிக்கு புதிய கொள்கை வகுக்க வலியுறுத்தும்: விவசாயிகளின் பிரசார இயக்கம் தொடக்கம்**

First Published : 29 Jun 2010 11:35:17 AM IST

திருவாரூர், ஜூன் 28: வேளாண் வளர்ச்சிக்கு புதிய கொள்கை வகுக்க வேண்டும் என வலியுறுத்தி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் திருவாரூர் மாவட்டம் முழுவதும் செல்லும் பிரசார இயக்கம் திருவாரூரில் திங்கள்கிழமை தொடங்கியது.

கோரிக்கைகள்: வேளாண் வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் ஆலோசனை வழங்கும் வகையில் தமிழகத்தில் புதிய விவசாயக் கொள்கை வகுக்க நிபுணர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், அரசு அலுவலர்களைக் கொண்ட மாநில அளவிலான சுய அதிகாரம் கொண்ட ஆலோசனை குழுவை ஏற்படுத்த வேண்டும். ஒருங்கிணைந்த நீர்வளப் பாதுகாப்புக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தென்னக நதிகள் இணைப்பை விரைவுபடுத்த வேண்டும்.

காவிரி நடுவர்மன்றம் அமைக்கப்பட்டு 20 ஆண்டுகள் கடந்தும், இறுதித்தீர்ப்பை மத்திய, மாநில அரசுகள் அமல்படுத்த வேண்டும். பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஆதரவான விதைச்சட்டம் 2010 மசோதாவை நிறைவேற்றக் கூடாது. பாரம்பரிய விவசாயத்துக்கு எதிரான உயிரியல் தொழில்நுட்ப ஒழுங்காற்றுச் சட்டத்தை அமல்படுத்தக் கூடாது.

60 வயதைக் கடந்த விவசாயிகளுக்கு உதவித் தொகை ரூ.1,000 வழங்க வேண்டும். நெல், தேங்காய் உள்ளிட்ட விளை பொருள்களுக்கு உரிய விலை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இப்பிரசாரப் பயணம் நடைபெற்றது.

விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் பி.எஸ். மாசிலாமணி மற்றும் மாவட்டத் தலைவர் எம்.என். சேரன் ஆகியோர் தலைமையில் இரு குழுக்கள் மாவட்டம் முழுவதும் மூன்று தினங்களுக்கு கிராமங்கள்தோறும் சென்று பிரசாரம் மேற்கொள்கிறது.

இப்பிரசாரப் பயணத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் வெ. வீரசேனன் தொடக்கி வைத்தார். நிகழ்ச்சியில் விவசாயிகள் சங்க மாவட்ட துணைச் செயலர் எம். சிவஞானம், மாவட்டப் பொருளர் ஏ.எஸ். பாண்டியன், மாவட்ட துணைத் தலைவர்கள் பி.ஆர். பாண்டியன், அறிவுடைநம்பி, காவிரி டெல்டா விவசாயிகள் பாதுகாப்புச் சங்கத்தின் தனபாலன் மற்றும் நிர்வாகிகள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

**விவசாயிகள் சங்கத்தினர் உண்ணாவிரதம்**

First Published : 29 Jun 2010 11:43:33 AM IST

அரியலூர், ஜூன் 28: அரியலூர் மாவட்டத்தில் கடந்த 2007-08 ஆம் ஆண்டில் மத்திய அரசின் சம்பூர்ண கிராம ரோஜ்கார் யோஜனா திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட பணிகளுக்கு வழங்கப்பட வேண்டிய அரிசி வழங்கப்படாமல் கோடிக்கணக்கான ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும், மோசடியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் அரியலூரில் திங்கள்கிழமை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

அரியலூர் பேருந்து நிலையம் எதிரே நடைபெற்ற உண்ணாவிரதத்துக்கு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் இரா. உலகநாதன் தலைமை வகித்தார். ஒன்றியச் செயலர்கள் எஸ். ராமமூர்த்தி (தா.பழூர்), ஐ. ஜெயராஜ் (ஜயங்கொண்டம்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

உண்ணாவிரதத்தை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலர் அ. வேணுகோபால் தொடக்கிவைத்தார்.

உண்ணாவிரதத்தில் விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் இரா. உலகநாதன் பேசியது:

சம்பூர்ண கிராம ரோஜ்கார் யோஜனா திட்டத்தின் கீழ் 2007-08 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளின் பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, இன்று வரையில் வழங்கப்படாமல் உள்ள அரிசியை உடனே வழங்க வேண்டும்.

ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி மன்றங்கள் சார்பில் சிமெண்ட் சாலைகள், சிறு பாலங்கள், தடுப்புச் சுவர்கள், கப்பி சாலைகள், படித்துறைகள் ஆகியவற்றுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 2 கோடி மதிப்பிலான அரிசியை அரசு அதிகாரிகள் துணையுடன் சிலர் மோசடி செய்துள்ளனர். இதுதொடர்பாக, விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

உண்ணாவிரதத்தில் ஏ.ஐ.டி.யூ.சி. சங்கப் பொதுச் செயலர் த. தண்டபாணி, ஆலத்தூர் ஒன்றியச் செயலர் கே. காசிநாதன், திருமானூர் ஒன்றியச் செயலர் ஜி. ஆறுமுகம், மாவட்டக் குழு உறுப்பினர் வீ. ஞானசேகரன், அரியலூர் நகரச் செயலர் து. பாண்டியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

First Published : 30 Jun 2010 03:55:16 AM IST

கடலூர், ஜூன் 29: தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் கடலூரில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் (படம்) நடத்தினர்.

வீட்டுமனை இல்லாத லட்சக்கணக்கான குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கி, கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தில் வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். கோயில், வக்ஃபு வாரியம் மற்றும் மடங்களுக்குச் சொந்தமான இடங்களில் பல ஆண்டுகளாக வசித்துவரும் ஏழைகளுக்கு, பட்டா மாற்றம் செய்து வீட்டு நிலம் வழங்க வேண்டும். கடலூர் மாவட்டத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைகளுக்கு கூடுதல் கால்நடை மருத்துவர்களை நியமிக்க வேண்டும். அனைத்து வங்கிகளிலும் சிறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழலாளர்களின் குழந்தைகளுக்குத் தடையின்றி கல்விக் கடன் வழங்க வேண்டும். கடலூர் மாவட்டத்தில் பெருகிவரும் கொலை, கொள்ளை, திருட்டுச் சம்பவங்களை காவல் துறை மூலம் கட்டுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளுக்காக இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

திருப்பாப்புலியூர் உழவர் சந்தைமுன் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்துக்கு, விவசாயிகள் சங்க மாவட்ட துணைத் தலைவர் எஸ்.தட்சிணாமூர்த்தி தலைமை தாங்கினார்.

**"பூச்சித் தாக்குதலில் அழியும் கத்தரி விவசாயம்'**

First Published : 30 Jun 2010 12:00:00 AM IST



பூச்சி தாக்கியதால் பாழாகிப் போன கத்தரி தோட்டம்.

செஞ்சி, ஜூன் 29: கத்தரிக்காயில் பூச்சி தாக்குவதால் விளைச்சலில் நஷ்டம் ஏற்பட்டு செஞ்சி வட்ட விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

செஞ்சி வட்டம் வணக்கம்பாடி, பொற்குணம், மகாதேவிமங்கலம், கடலி, நீலாம்பூண்டி உள்ளிட்ட கிராமங்களில் நாட்டு கத்தரி பயிரிடப்பட்டு வருகிறது. குறிப்பாக வணக்கம்பாடி கிராமத்தில் 15 ஆண்டுகளாக தொடர்ந்து கத்தரி பயிர் செய்து வருகின்றனர்.

ஆனால் இந்த ஆண்டு தொடக்கத்தில் கத்தரி விளைச்சல் நன்றாக இருந்தாலும், தற்போது பெய்த மழையால் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தால் கத்தரிக்காயில் பூச்சி இறங்கி சொத்தையாகி விட்டது.

இங்கு இருந்து ஒரு நாளைக்கு சுமார் 75 மூட்டைகள் விற்பனைக்கு செல்கிறது. குறிப்பாக திண்டிவனத்துக்கு தினமும் 40 மூட்டைகள் விற்பனைக்கு செல்கிறது. வணக்கம்பாடியில் விலையும் நாட்டுக் கத்தரிக்கு திண்டிவனத்தில் நல்ல வரவேற்பு உள்ளது. ஒரு கிலோ ரூ.5-க்கு விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். வியாபாரிகள் ரூ.10-க்கு விற்பனை செய்கின்றனர். விழுப்புரம் மாவட்டத்தில் மிக அதிக அளவு கத்தரி விளைச்சல் செய்ததற்காக, கடந்த 3 ஆண்டுகளுக்கு முன் விளைச்சலில் சாதனையை பாராட்டி வேளாண் துறை கத்தரி அவார்டு வழங்கி சிறப்பித்துள்ளது.

செஞ்சி உழவர் சந்தை மற்றும் காய்கறி அங்காடிகளில் 10 மூட்டை கத்தரிக்காய் விற்பனை செய்கின்றனர். ஆனால் திடீரென கத்தரிக்காயை பூச்சி தாக்கி விட்டதால் அவற்றை அறுவடை செய்து வீணாக வீதியில் கொட்டி அழித்து வருகின்றனர். இதனால் கத்தரி விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள் வேதனையில் ஆழ்ந்துள்ளனர்.

இது குறித்து வணக்கம்பாடி விவசாயி ஒருவர் கூறுகையில், ""ரூ.1000 அளவுக்கு பூச்சி மருந்து அடித்து விட்டேன். கத்தரியை பூச்சி தாக்குவது நிற்கவில்லை" என்றார். மேலும் 4 மூட்டை விளைந்தால் அதில் 2 மூட்டை பூச்சி தாக்கி சொத்தையாக உள்ளது. இதனால் விளைச்சலில் பாதி அளவுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. வேளாண் துறையினர் இது குறித்து கண்டுகொள்வதில்லை. கத்தரிக்கு தேவையான பூச்சி மருந்துகளை தருவதில்லை" என்றார் அவர்.

இக்கிராமத்தில் மட்டும் 90 விவசாய குடும்பத்தினர் சுமார் 10 ஏக்கர் அளவில் கத்திரி வைத்து பயிர் செய்து வருகின்றனர். இது குறித்து வேளாண் துறை தக்க நடவடிக்கை எடுத்து பாதிப்படைந்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

தினமலர்

**டேன் டீ'யில் கசப்பு தேன் விற்பனை ஜோர் மூலிகை பினாயிலுக்கு அமோக வரவேற்பு**

சேலம்: சேலத்தில் தமிழ்நாடு வனத்துறை சார்பில் வைக்கப்பட்டுள்ள டேன் டீ விற்பனை நிலையத்தில், கசப்பு தேன் விற்பனையும், மூலிகை பினாயில் விற்பனையும் அமோகமாக நடக்கிறது. சேலம் செரி ரோட்டில் உள்ள வனத்துறை அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகத்தின் சார்பில், தமிழ்நாடு வனத்துறையின் கீழ் "டேன் டீ' விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு அடர்ந்த காடுகளில் கிடைக்கும் இயற்கையான பொருட்கள், தேயிலை தூள், வாசனை பொருட்கள், சோப்பு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. "டேன் டீ' விற்பனை நிலையத்தில் பொருட்கள் விற்பனை குறித்து அதிகாரிகள் கூறியதாவது: இங்கு விற்கப்படும் பொருட்கள் அனைத்தும் காடுகளில் இயற்கையாக கிடைக்கும் பொருட்களிலிருந்து அதன் தன்மை மாறாமல் தயாரிக்கப்படுகிறது. இத்தகைய பொருட்களால் பக்கவிளைவுகள் இல்லை என்பதால், மக்கள் அமோக வரவேற்பு அளித்து வருகின்றனர். எங்களது

பொருட்கள் தாதகாப்பட்டி, சூரமங்கலம், அம்மாப்பேட்டை, அஸ்தம்பட்டி உள்ளிட்ட உழவர் சந்தைகளிலும் கிடைக்கிறது.

சுப்ரீம் லீப் டீத்தூள் முதன்மையான தேயிலை கொழுந்து என்பதால், இதில் பால் கலக்காமல் கறுப்பு டீ தயாரித்தால் சுவையாக இருக்கும். இது கொழுப்பு குறைப்பு, சிறுநீரக செயலிழப்பு, ரத்த அழுத்தம் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு சிறந்த மருந்தென டாக்டர்கள் கூறுகின்றனர். தமிழகத்தில் இருந்து மேலை நாடுகளுக்கு சுப்ரீம் லீப் டீத்தூள் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. சுப்ரீம் லீப் டீத்தூள் 250 கிராம் 58 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மற்ற தரங்களான சி.டி.சி., டஸ்ட் டீ, ஸ்பெஷல் பிளண்ட் டீ, லாஸன் லீப் டீ, ஹோட்டல் பிளண்ட் டீ ஆகியவற்றின் விலையும், தனியார் நிறுவனங்களின் டீத்தூள் விலையை விட குறைவென்பதால் விற்பனை அமோகமாக நடந்து வருகிறது. தனியார் விற்பனை நிலையத்தில் விற்கப்படும் மிளகு, லவங்கம், பட்டை உள்ளிட்ட பொருட்களில் ஆயில் எடுத்து விற்பனை செய்து வருகின்றனர். ஆனால், "டேன் டீ' விற்பனை நிலையத்தில் ஆயில் எடுக்காத, வாசனை மிகுந்த மிளகு, லவங்கம், பட்டை விற்கப்படுகிறது. மிளகு 250 கிராம் 50 ரூபாய்க்கும், பட்டை 50 கிராம் 22 ரூபாய்க்கும், லவங்கம் 25 கிராம் 30 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

சுத்தமான தேன் மெழுகு, தேங்காய் எண்ணெயால் செய்யப்பட்ட குளியல் சோப் 50 கிராம் 28 ரூபாய்க்கு கிடைக்கிறது. ஏசி, லெமன் கிராஸ், மல்லிகை போன்ற நறுமணங்களில் கிடைக்கிறது. இயற்கையாக கிடைக்கும் பொருட்களில் சோப் தயாரிக்கப்படுவதால் பக்க விளைவுகள் இருக்காது. சினிபிரஸ், நீலகிரி தைலம், புல் தைலம், சிட்டி டோரா, லெமன் கிராஸ் உள்ளிட்ட நறுமணப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட பினாயில் விற்பனைக்கு வந்துள்ளது. இது மற்ற பினாயில் போல் இல்லாமல் வீடுகளில் மணத்தை ஏற்படுத்தக் கூடிய தன்மை கொண்டது. அரசு நிறுவனங்கள், மருத்துவமனைகள், வீடுகளுக்கு இந்த பெனாயில் சிறந்தது. ஒரு லிட்டர் 80 ரூபாய்க்கு கிடைக்கிறது. மருத்துவ குணம் கொண்ட கசப்பு தேன் முதுமலைக் காடுகளில் இருந்து எடுக்கப்பட்டு, விற்பனைக்கு வந்துள்ளது. இனிப்பு தேன்களுக்கு மத்தியில் கசப்பு தேன் மக்கள் மத்தியில் புதிதென்பதால் அதிகளவில் மக்கள் வாங்கி உபயோகித்து வருகின்றனர். கசப்பு தேன் முதுமலைகளில் உள்ள மூலிகைப் பூக்கள் அடங்கிய தேன் என்பதாலும், மகரந்தம் அழியாமல் தேன் எடுக்கப்படுவதாலும் ரத்த அழுத்தம், உடல் சோர்வு ஆகியவற்றிற்கு நல்ல மருந்தாக உள்ளது. கசப்பு தேன், இனிப்பு தேன் அரை லிட்டர் 120 ரூபாய் முதல் "டேன் டீ' விற்பனை நிலையத்தில் கிடைக்கிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**பாசனத்திற்கு தண்ணீர் திறக்க உழவர் முன்னணி கோரிக்கை**

சிதம்பரம்: காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின்படி காவிரி நீர் பெற்று பாசனத்திற்கு மேட்டூரில் இருந்து தண் ணீர் திறக்க வேண்டும் என தமிழக உழவர் முன்னணி அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளது.

இது குறித்து தமிழக முதல்வருக்கு உழவர் முன்னணி செயலாளர் ஆறுமுகம் அனுப்பியுள்ள மனு:காவிரி இடைக்கால தீர்ப்பின் படி ஜனவரி முதல் ஜூன் வரை கர்நாடகம் 22.11 டி.எம்.சி., தண்ணீரை கொடுக்க வேண்டியுள்ளது. தமிழக அரசு கர்நாடகத்திற்கு நெருக்கடி கொடுத்து நீரைப் பெற்று மேட்டூர் அணையை பாசனத்திற் காக திறந்துவிட வேண்டும்.கர்நாடகத்தில் இருந்து நீரை பெறுவதற்கு பதில் பருவ மழை

நன்றாக இருந்தால் மேட்டூர் அணை திறக்கப்படும் என பொதுப்பணித் துறை அமைச்சர் அறிக்கை விடுவது தமிழக உழவர்களை பாதிப்பதோடு காவிரியில் நமது உரிமைக்கும் பாதிப்பு ஏற்படுத்தும்.மேலும் கர்நாடகம் காவிரி நீரை ஜூலையில் 42.76 டி.எம்.சி., ஆகஸ்ட் டில் 54.72, செப்டம்பரில் 29.36, அக்டோபரில் 30.17 டி.எம்.சி., யும் கொடுக்க வேண்டும். எனவே தமிழகத்திற்கு மாதம்தோறும் கிடைக்க வேண்டிய தண் ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் கூறப்பட்டுள்ளது.

**பயறு வகை பயிர்களுக்கு டி.ஏ.பி., கரைசல் அவசியம்**

நாமக்கல்: "பயறு வகை பயிர்களுக்கு டி.ஏ.பி., கரைசலை தெளித்து அதிக மகசூல் பெறலாம்' என, மல்லசமுத்திரம் வேளாண் உதவி இயக்குனர் பூங்கொடி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: மல்லசமுத்திரம் வட்டாரத்தில் தற்போது சாகுபடி செய்துள்ள பயறுவகை பயிர்களில் மகசூலை அதிகரிக்க டி.ஏ.பி., கரைசல் தெளிப்பது அவசியம். பூக்கும் பருத்தில் ஒரு முறையும், 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் 2 சதம் டி.ஏ.பி., கரைசல் தெளிக்க வேண்டும். ஒரு முறை தெளிப்பதற்கு ஒரு ஏக்கருக்கு 5 கிலோ டி.ஏ.பி., உரத்தை 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரு இரவு முழுவதும் ஊறவைக்க வேண்டும். தெளிந்த நீரை வடிகட்டி 240 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் காலை அல்லது மாலை வேளைகளில் மண்ணில் ஈரப்பதம் இருக்கும் போது தெளிக்க வேண்டும். அதன் மூலம் திரட்சியான காய்கள் பிடித்து மகசூல் அதிகரிக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**சம்பா பருவ சாகுபடிக்கு400 டன் விதை நெல் இருப்பு**

சிவகங்கை: ""நடப்பு சம்பா பருவ நடவிற்காக 400 டன் விதை நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது,'' என விவசாயத்துறை இணை இயக்குனர் ரவிகுலசேகரபாண்டியன் தெரிவித்தார். அவர் கூறியதாவது:சிங்கம்புணரி, எஸ்.புதூர், திருப்புத்தூர் தாலுகாவில் 5,000 எக்டேரில், விவசாயிகள் நிலக்கடலை நடவு செய்கின்றனர். நடப்பு கால பருவத்திற்கு, கடலை சாகுபடி செய்ய மானிய விலையில் விதைகள் தரப்படும். ஒரு கிலோ 45 ரூபாய் விலையுள்ள விதைக்கு, 12 ரூபாய் மானியம்; 30 ரூபாய் விலையுள்ள 100 மில்லி விதை நேர்த்தி மருந்துக்கு,12 ரூபாய் மானியம்; ஆறு ரூபாய்க்கு விற்கும் 200 கிராம் உயிர் உர பொட்டலத்திற்கு, மூன்று ரூபாய் மானியம் வழங்கப்படும்.விதை நெல் இருப்பு: சம்பா சாகுபடிக்கு இளையான்குடி, தேவகோட்டை, கண்ணங்குடி விவசாயிகள் நேரடியாக நெல் நடவு செய்வர். மற்ற தாலுகாக்களில் நாற்று முறையில் நடவு செய்யப்படும். இதற்காக ஆடுதுறை 36, 39, கர்நாடகா பொன்னி வி.பி.டி.,52.4, கோ.,43, ஐ.ஆர்., 36 ரக நெல் விதைகள், 400 டன் வரை இருப்பு உள்ளன. தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் விதை நெல், கிலோவிற்கு ஐந்து ரூபாய் மானிய விலையில் வழங்கப்படும். நெல்லில் இலை பேன், தத்துப்பூச்சி தாக்காமல் கட்டுப்படுத்த, வசம்பு கலந்த தூள் மருந்து, வேம்பு எண்ணெய் கலந்த மருந்து 50 சதவீத மானியத்தில் வழங்கப்படும். செம்மை நெல் சாகுபடியில் களை எடுக்கும் கருவி, நடவு இயந்திரம் 50 சதவீத மானிய விலையில் தரப்படும். விவசாயத்துறை விரிவாக்க மையங்களில் மானிய விலையில் விதை, மருந்துகளை பெறலாம்.கருவிகள் முன்பதிவு: தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில், விவசாயிகளுக்கு பவர்டிரில்லர், பம்ப் செட், தார்பாய், மருந்து தெளிப்பான், தெளிப்பு நீர் பாசன கருவி (ஸ்பிரிங்கிலர்) வழங்கப்படம். விருப்பம் உள்ள விவசாயிகள், உதவி இயக்குனர் அலுவலகத்தில் முன்பதிவு

செய்துகொள்ளவும். கருவிகள் வந்த பின் முன்பதிவு அடிப்படையில் வழங்கப்படும் என்றார். விவசாய அலுவலர் நடராஜன் உடனிருந்தார்.

**உழவர் சந்தையின் விற்பனை விலையில் மோசம்**

ராமநாதபுரம்: மாவட்டத்தில் உழவர் சந்தையில் விற்கப்படும் காய்களின் விலையானது, பட்டியலில் குறிப்பிட்டுள்ளதை விட அதிகமாக உள்ளதால், பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர். விவசாய பொருட்களை சந்தைப்படுத்தும் நோக்கிலும், பொதுமக்களுக்கு நியாயமான விலையில் காய்கறிகள் கிடைக்கவும் அரசு தரப்பில் உழவர் சந்தை திறக்கப்பட்டது. தொடக்கத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலையில் காய்கறிகள் விற்கப்பட்ட நிலையில், காலப்போக்கில் எல்லாம் மறைந்து விட்டது. பட்டியலில் குறிப்பிடப்படும் விலைக்கும், விற்பனைக்கு வரும் பொருளின் விலைக்கும் ஏகத்தும் வேறுபாடு உள்ளது. தோட்டபயிர்களுக்கும் இதே நிலை தான். அதிகாரிகள் சிலர் விவசாயிகளிடம் "கவனிப்புகள்' கேட்டு நச்சரிப்பது தான், இந்த விலைபாகுபாட்டிற்கு காரணம் என பரவலாக கூறப்படுகிறது. இன்னும் சில இடங்களில் வரக்கூடிய விவசாயிகளுக்கு தேவையான எந்த வசதியும் உழவர் சந்தையில் செய்து தரப்படாமல் உள்ளது. இதனால் காய்கறிகளை சுத்தம் செய்யும் நீரை கூட வெளியில் வாங்கி செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு விவசாயிகள் தள்ளப்படுகின்றனர். இதனால் ஆகும் செலவுகளை ஈடுசெய்யவே, அறிவிப்பை மீறிய விலை நிர்ணயத்தில் சில விவசாயிகள் ஈடுபடுவதாகவும் தெரிகிறது. இப்படி விலை பாகுபாட்டிற்கு நிறைய காரணங்கள் கூறப்பட்டாலும், பாதிப்பு என வரும் போது அவை அனைத்தும் பொதுமக்களை சார்ந்ததாகவே உள்ளது. எகிறி வரும் விலைவாசி உயர்வுக்கு மத்தியில் இன்று பல குடும்பங்கள், உழவர் சந்தையின் காய்கறிகளை நம்பித்தான் பிழைப்பை நடத்தி வருகின்றன. அப்படியிருக்கும் போது, ஒரு சிலரின் சுயநலத்திற்காக விலையில் மாற்றம் செய்வது கண்டிக்கதக்கதாகும். அதிகாரிகளின் கவனம் உழவர் சந்தையின் மீதிருந்து மாறி ஆண்டுகள் பல ஆகிவிட்டது. மாவட்டத்தில் பிரயோஜனமின்றி தடுமாறி வரும் உழவர் சந்தையை மீட்டு, பொதுமக்களின் முறையான பயன்பாட்டுக்கு கொண்டு வர மாவட்ட நிர்வாகம் முன்வர வேண்டும். குறைந்த பட்சம் பட்டியலில் இருக்கும் விலை குறித்த கண்காணிப்பையாவது தீவிரப்படுத்தினால் வசதியாக இருக்கும்.

**தென்மேற்கு பருவமழை தீவிரம்**

பொள்ளாச்சி: மேற்கு தொடர்ச்சி மலையில் தென்மேற்கு பருவமழை பெய்ததால் சோலையாறு அணையில் ஒரு மாதத்தில் 41 அடியும், அமராவதி அணையில் 29 அடியும் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் மே மாத இறுதியில் தென்மேற்கு பருவநிலை துவங்கியது. பருவமழை சீசன் துவங்கியதும், மழை தீவிரமடைந்து அணைகளின் நீர்மட்டம் உயர கை கொடுத்துள்ளது. கடந்த முதல் தேதியில் சோலையாறு அணையில் 20.57 அடியும், பரம்பிக்குளம் அணையில் 22 அடியும், ஆழியாறு அணையில் 96.30 அடியும், திருமூர்த்தி அணையில் 36.61 அடியும், அமராவதி அணையில் 20.66 அடியும் நீர்மட்டம் இருந்தது. மழையால், சோலையாறு, அமராவதி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

பரம்பிக்குளம் அணையின் 72 அடி உயரத்தில் 18.03 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு ஆயிரத்து 100 கனஅடி தண்ணீர் வரத்தும், 656 கனஅடி தண்ணீர் வெளியேற்றமும் உள்ளது. ஆழியாறு அணையின் 120 அடி உயரத்தில் 96.60 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 135 கனஅடி தண்ணீர் வரத்தும், 170 கன அடி தண்ணீர் வெளியேற்றமும் உள்ளது.திருமூர்த்தி அணையின் 60 அடி உயரத்தில், 35.64 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 433 கனஅடி தண்ணீர் வரத்து உள்ளது. அமராவதி அணையின் 90 அடி உயரத்தில் 49.35 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 480 கனஅடி தண்ணீர் வரத்துள்ளது. அமராவதி அணையில் கடந்த ஒரு மாதத்தில் 29 அடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது.நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழையளவு (மி.மீ.,): சோலையாறு - 54, பரம்பிக் குளம் - 49,  ஆழியாறு - 2.5, மேல்நீராறு- 45, கீழ் நீராறு - 54, தூணக்கடவு - 36, பெருவாரிபள்ளம் - 40, மேல் ஆழியாறு - 40, காடம்பாறை - 2, வால்பாறை - 34, மணக்கடவு - 1, சர்க்கார்பதி  9, நவமலை -3 என்ற அளவில் மழை பதிவானது.

**உறைகிணறு அமைத்த விவசாயிகளின் இணைப்பு மட்டுமே துண்டிப்பு: கலெக்டர்**

தேனி: ""குடிநீருக்காக திறந்து விடப்பட்ட நீரை, ஆற்றுக் குள் உறைகிணறு அமைத்து விவசாயத்திற்கு பயன்படுத்திய 91 பேரின் மின் இணைப்புகள் மட்டுமே துண்டிக்கப்பட் டுள்ளது'', என கலெக்டர் முத்துவீரன் தெரிவித்தார். அவர் கூறியதாவது: தேனி மாவட்டத்தில் ஜனவரி முதல் மார்ச் வரை கடும் குடிநீர் தட்டுப்பாடு நிலவியது. இதையடுத்து குடிநீருக்காக முல்லை பெரியாறு அணை திறக்கப்பட்டது. இந்த நீரை ஆற்றுக்குள் உறை கிணறுகள் அமைத்து விவசாயத்திற்கு உறிஞ்சினர். இதனால் ஆறு லட்சம் மக்களுக்கு குடிநீர் வழங்க முடியாத நிலை ஏற்பட்டது. இதை தொடர்ந்து முறைகேடாக ஆற்று நீரை உறிஞ்சிய 297 பேரின் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. பொதுப்பணித்துறை அனுமதியுடன் ஆற்றில் இருந்து 50 முதல் 200 மீட்டருக்குள் போர்வெல் அமைக்கலாம். இப்படி அனுமதி பெற்றவர்கள் 206 பேருக்கு மீண்டும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. போர்வெல் அல்லது கிணறு இல்லாமல் ஆற்றுக் குள் நேரடியாக உறைகிணறு அமைத்து மின் இணைப்பு பெற்ற 91 பேரின் இணைப்புகள் மட்டுமே தற்போது துண்டிக்கப் பட்டுள்ளன. பொதுப்பணித்துறை மற்றும் மின்வாரிய நிபந்தனைகளை கடைபிடித்தால் இவர்களுக்கும் இணைப்பு வழங்கப்படும் என்றார்.

**தாண்டிக்குடியில் பலாப்பழ சீசன்**

தாண்டிக்குடி: கொடைக்கானல் கீழ்மலைப்பகுதியில் பலாப் பழ சீசன் துவங்கியுள்ளது. திண்டுக்கல் மாவட்டம் தாண்டிக்குடி மலைப்பகுதிகளான பண்ணைக்காடு, புல்லாவெளி, தடியன்குடிசை, மஞ்சள்பரப்பு, கொடலங்காடு, அரசன்கொடை, பெரும்பள்ளம் உள்ளிட்ட பகுதிகளில் பலாப்பழங்கள் தற்போது அதிக அளவில் விளைந்துள்ளது. பலாவில் தற்போது முட்டம் வரிக்காய், சிங்கப்பூர், பண்ருட்டி, பேச்சிப்பாறை-1, பாலூர்-1, 2 உள்ளிட்ட ரகங்கள் உள்ளன.கீழ்மலைப்பகுதியில் ஜாதி, கூலம் வகை பழங்கள் விளைந்துள்ளது. இந்தபழங்கள் கொடைக்கானல், வத்தலக்குண்டு, திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது. ஒரு பழம் தரத்திற்கு தகுந்தாற்போல் போல் ரூ.50 முதல் 100க்கு விற்கப்படுகிறது.

---

**சரிந்தது பாசிப் பயறு**

விருதுநகர்,: விருதுநகரில் பாசிப்பயறு விலை மூடைக்கு மே மாதம் 6,500 ரூபாயாக இருந்தது. தற்போது 5,500 ரூபாயாக உள்ளது. 8,500 ரூபாயாக இருந்த பாசிப்பருப்பு தற்போது 7,500 ரூபாயாக உள்ளது. கர்நாடகா மாநிலத்திலிருந்து புதுப் பாசிப்பயறு ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் தான் விற்பனைக்கு வரும். ஆனால் அங்கிருந்து இப்போதே விற்பனைக்கு வருவதால் பாசிப்பயறு விலை மூடைக்கு ஒரு மாதத்தில் 1000 ரூபாய் வரை குறைந்துள்ளது. ஆகஸ்ட் மாதத்தில் மகாராஷ்டிரா, ஆந்திராவிலிருந்தும் விற்பனைக்கு வர இருப்பதால் இதன் விலை மேலும் குறையலாம்.

**முருங்கை காய் விலை உயர்வு : மகிழ்ச்சியில் விவசாயிகள்**

பொங்கலூர்: முருங்கை காய் விலை உயர்வால்,விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.பொங்கலூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள், முருங்கையை தனியாக பயிர் செய்யாமல், ஊடுபயிராகவே பயிரிடுகின்றனர். இதற்கு குறைவான தண்ணீர் இருந்தால் போதுமானது. மாதக்கணக்கில் தண்ணீர் இல்லாமல் போனாலும், மரம் பட்டுப்போகாது. மழை பெய்ததும் மீண்டும் துளிர் விட்டு, பூ பூக்கும் இயல்புடையது.

இதன் மூலம் கூடுதல் வருவாய் கிடைக்கிறது. இங்கு விளையும் முருங்கை காய்களில் 90 சதவீதம் திருப்பூர் மார்க்கெட்டிலேயே விற்பனையாகி விடுகிறது. முருங்கை மரத்தின் கீரை, பூ, காய் போன்ற அனைத்துப் பொருட்களும் உணவாகின்றன. இது, ஆண்டு முழுவதும் விளையாமல் சீசனில் மட்டும் அதிகம் காய்ப்பதால், சில நேரங்களில் விலை சரிவு ஏற்படுகிறது. இதை தவிர்க்க, நாற்று விட்டு செடியை நடவு செய்தால், சீசன் இல்லாத நேரங்களில் காய் பிடித்து, அதிக வருவாயை ஈட்டித்தரும். தற்போது, மார்க்கெட்டுக்கு செடி முருங்கை காய்களே அதிகம் வருகின்றன.முருங்கை கீரையில் இரும்புச்சத்து அதிகம் என்பதால், இதை மக்கள் விரும்பி சாப்பிடுகின்றனர். முருங்கை கீரைக்கு ஆண்டு முழுவதும் கிராக்கியிருந்து கொண்டே இருக்கிறது.இதை பறித்ததும், உடனடியாக சந்தைக்கு கொண்டு வந்து விற்பனை செய்ய வேண்டும். நேரம் ஆக ஆக இலைகள் உதிர்ந்து விடும்.

இதன் காரணமாகவே பல விவசாயிகள் இலையை பறித்து விற்பனை செய்ய முடிவதில்லை. காயாக விற்பனை செய்வதை விட, இதன் இலைகளை பறித்து விற்பனை செய்தால் அதிக லாபம் கிடைக்கும்.முருங்கைக்கு தற்போது சீசன் இல்லாததால், மொத்த உற்பத்தியில் 20 சதவீதம் மட்டுமே உற்பத்தியாகிறது. உற்பத்தி குறைவு என்பதாலும், தற்போது கல்யாண சீசன் என்பதாலும் முருங்கை காய் விலை ஏற்றம் தவிர்க்க முடியாததாகி விட்டது. உள்ளூர் வரத்து மிகவும் குறைந்து விட்டதால், வியாபாரிகள் மூலனூர் பகுதியில் இருந்து கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.தற்போது மார்க்கெட்டில் நெட்டை ரகம் 25 காய் கொண்ட ஒரு கட்டு 75 ரூபாய்க்கும், குட்டை ரகம் 50 ரூபாய்க்கும் விற்பனையாகிறது. தேங்காய் விலைக்கு இணையாக முருங்கை காய் விற்பனையாவதால், முருங்கை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

---

**கரும்பு சாகுபடியில் வறட்சி நிர்வாகம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 30,2010,00:00 IST



தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க முதலில் மண்ணிலிருந்து நீர் ஆவியாகி விரயமாவதை தடுக்க வேண்டும். இதற்கு கரும்பு சோகைகளை பயன்படுத்தலாம். கரும்பு சோகை ஒரு எக்டரிலிருந்து 10 டன் வரை கிடைக்கும். இதை மக்கவைத்து இயற்கை உரமாக பயன்படுத்தலாம். அல்லது அப்படியே கரும்பு நட்ட பார்கள் மேல் சீராக பரப்பி வைக்கலாம். இதனால் நீர் ஆவியாகி விரயமாவது தடுக்கப்படும். மேலும் கரும்பு சோகைகளை பார்களின் மேல் பரப்புவதால் களைகள் வளர்வதும் கட்டுப் படுத்தப்படும். மேலும் கரும்பு சோகை மக்கி எருவாகவும் மாறி மண் வளத்தை பெருக்கும். கரும்பிற்கு பார் கட்டும்பொழுது சோகைகளையும் சேர்த்து அணைத்துக்கொடுப்பதால் வளரும் கரும்பிற்கு ஒரு அங்கக உரமாக பயன்படும். கரும்பு சோகைகளை இரு பார்களுக்கு இடையிலேயும் பரப்பலாம். இந்த முறையில் முலை வரும் கரும்பை மூடி சேதப் படுத்தாமல் கவனமாக செய்ய வேண்டும்.

தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க பயிர் வளர்ச்சி ஊக்கிகளில் கரணை நேர்த்தி செய்யலாம். அதாவது கரணைகளை நடவு செய்வதற்கு முன்னால் எத்ரல் வளர்ச்சி ஊக்கி 200 பிபிஎம் என்றால் பார்ட்ஸ் பெர் மில்லியன் அதாவது பத்து லட்சத்தில் ஒரு பங்கு என்று அர்த்தம். 200 பிபிஎம் எத்ரல் தயாரிக்க, 200 மில்லி மருந்தை 400 லிட்டர் தண்ணீரில் கலந்து கரணைகளை ஒரு மணி நேரம் ஊறவைத்து நடவுசெய்யலாம். இதனால் நல்ல முளைப்பு திறனும் வறட்சியைத் தாங்கும் தன்மையும் உண்டாகும். மேலும் எத்ரல் கரணை நேர்த்தி செய்வதால் அதிக தூர்கள் விட்டு மகசூல் அதிகரிக்கும். வறட்சி தாங்கும் தன்மையை அதிகரிக்க நீர்த்த சுண்ணாம்பு நீரையும் பயன்படுத்தலாம். இதற்கு 80 கிலோ நீர்த்த சுண்ணாம்பை 400 லிட்டர் தண்ணீரில் கலந்து கரணைகளை ஊறவைத்து நடலாம். இதனால் வறட்சி தாங்கும் தன்மை அதிகரிக்கும்.

கரணைகளை நடும்பொழுது 30 செ.மீ. ஆழக்கால் அமைத்து நடவு செய்வதன் மூலம் வறட்சி தாங்கும் தன்மையை அதிகரிக்கலாம். ஆழக்கால் நடவு முறையில் கரணைகளின் வேர்கள் நன்கு ஊடுருவி பாய்ந்து நிலத்தடி நீரை உறிஞ்சுவதால் வறட்சியை சமாளிக்கும் திறன் பெறும். மேலும் கரும்பு வளர்ந்த பின் காற்றில் சாய்வதையும் வெகுவாக குறைக்க இயலும். ஆழக்கால் நடவு முறையில் தற்போது சில மாற்றங்கள் செய்யப்பட்டு குழி நடவு முறை பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

தண்ணீர் பற்றாக்குறையின் போது பயிர்கள் பூமியிலிருந்து ஊட்டச்சத்துக்களை உறிஞ்ச இயலாத சூழ்நிலை ஏற்படும். இதை தவிர்க்க யூரியா 2.5 சத கரைசலை கோடையில் இலை வழியாக தெளிக்கலாம். இத்துடன் பொட்டாஷ் 2.5 சத கரைசலையும் சேர்த்து தெளிப்பதால் வறட்சியை தாங்கி வளரும். இதற்கு 12.5 கிலோ யூரியா மற்றும் 12.5 கிலோ பொட்டாஷை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு எக்டர் கரும்புக்கு இலை வழியாக தெளிக்கலாம்.

இந்த முறையினை ஒரு மாத இடைவெளியில் கோடை காலங்களில் செய்வதால் பயிர் பட்டுப்போகாமல் ஊக்கமுடன் வளர உதவும். பொட்டாஷ் இலை வழியாக கொடுப்பதால், நீர் இலை துளிகள் வழியே நீராவி போக்காக வெளியேறி விரயமாவதை குறைக்க உதவும். இத்துடன் கோடை காலங்களில் ஒரு பார் விட்டு நீர் பாய்ச்சுவதால் ஒரு முறை நீர் பாசனத்திற்கு தேவையான தண்ணீரை பாதியாக குறைக்க முடியும். அடுத்த முறை தண்ணீர் பாய்ச்சும்போது ஏற்கனவே விட்டுப்போன பார்களுக்கு நீர் பாய்ச்ச வேண்டும். சமீப காலமாக நீர் மேலாண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின்படி சொட்டுநீர் பாசனம் ஆகியவற்றையும் பின்பற்றலாம். சொட்டுநீர் பாசனத்தால் கரும்பிற்கு தேவையான தண்ணீரின் அளவை பாதியாக குறைக்க இயலும் என்று கண்டறியப் பட்டுள்ளது. இதனால் தண்ணீரை சிக்கனமாக பயன் படுத்துவது அல்லாமல் விளைச்சலும் எந்த விதத்திலும் பாதிக்கப்படாது. சொட்டு நீர்பாசனம் செய்யும் பொழுது கரும்பிற்கு தேவையான உரச் சத்துக்களையும் பாசன நீர் வழியே கொடுக்க இயலும். இந்த முறைதான் பெர்டிகேஷன் என்று அழைக்கப்படுகிறது.

இதனால் ஒரு எக்டருக்கு 175 முதல் 200 டன் வரை கரும்பு விளைச்சல் அதிகரிக்கும். இது சாதாரண முறையில் கிடைக்கக்கூடிய விளைச்சலை விட 70லிருந்து 90 டன்கள் அதிகமாகும். சுமார் 25 லிருந்து 50 விழுக்காடு பாசன நீரை சேமிக்கலாம். இதன் மூலம் கரும்பு பயிரிடும் நிலப்பரப்பை அதிகரிக்கலாம். சொட்டுநீர் மற்றும் பெர்டிகேஷன் முறையில் நீர்பாசனம், உரச்செலவு மற்றும் களை நிர்வாகத்திற்கு தேவையான செலவினங்களை பாதி குறைக்க இயலும். இந்த முறையில் சாதாரண முறையில் கரும்பு சாகுபடியில் கிடைக்கும், எக்டருக்கு ரூ.58,000 லாபத்தைவிட சொட்டுநீர் பாசனம் மற்றும் பெர்டிகேஷன் மூலம் எக்டருக்கு ரூ.75,000 வரை நிகர லாபம் பெறலாம். இத்துடன் வறட்சியை சமாளிக்க தாங்கி வளரும் சிறந்த ரகங்களை தேர்வு செய்ய வேண்டும். இத்துடன் சிபாரிசு செய்யப்படும் வறட்சி நிர்வாக முறைகளை கடைபிடித்தால் விளைச்சல் பாதிக்காமல் அதிக வருவாயை பெறலாம். டாக்டர் கொ.பாலகிருஷ்ணன்,

பேராசிரியர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 30,2010,00:00 IST




**(1) * குண்டுமல்லி:** இயற்கைமுறையில் சாகுபடிசெய்து ஏக்கருக்கு ரூ.2 லட்சம் வரை லாபம் பார்க்கிறார் சத்தியமங்கலம் (ஈரோடு மாவட்டம்) அடுத்துள்ள சிக்கிரசம் பாளையத்தைச் சேர்ந்த விவசாயி ஓதிச்சாமி. ஆடி முதல் மார்கழி வரை குண்டுமல்லி நடவுக்கு ஏற்ற பட்டம். கோடை உழவு செய்து 15 டன் தொழு உரத்தை பரவலாக இறைத்துவிட்டு, மறுபடியும் 2 முறை ஏர் உழவு செய்து, 4 அடி இடைவெளியில் பார் முறை பாத்திஅமைத்து, அரை அடி அகலம், ஒரு அடி ஆழம் கொண்ட குழிகளை 4 அடி இடைவெளியில் எடுத்து (ஏக்கருக்கு 2500 குழிகள்) 5 மாத வயதான நாற்றுக்களை குழிக்கு இரண்டாக பதியம் போட்டு மூடி உடனே நீர்பாய்ச்ச வேண்டும். ராமநாதபுரம் மாவட்டம்தங்கச்சிமடம்பகுதியிலிருந்துதான் தமிழகம் முழுவதும் மல்லி நாற்றுக்களை விவசாயிகள் வாங்கி வந்து நடுகிறார்கள் என்கிறார் விவசாயி. நாற்றின் விலை ஒரு ரூபாய்.

நடவு முடிந்ததும் வாரம் ஒரு முறை தண்ணீர் விடவேண்டும். சொட்டுநீர் பாசனம் அமைக்கலாம். முதல் 5 மாதத்திற்கு மாதம் ஒரு களை எடுக்க வேண்டும். 2 வது மற்றும் 5வது களைக்குப்பின் செடிக்கு 2 கிலோ வீதம் மண்புழு உரம் வைத்து பாசனம் செய்ய வேண்டும். தொடர்ந்து 2 மாதத்திற்கு ஒரு முறை 500 லிட்டர் கோ மூத்திரத்துடன் 50 கிலோ சாணத்தைக் கரைத்து பாசனத்தண்ணீரோடு கொடுக்கலாம். பூச்சி கட்டுப்பாட்டிற்கு மூலிகை பூச்சிவிரட்டி தெளிக்கலாம். நடவு செய்த 150ம் நாளில் பூ மொட்டுக்களை அறுவடை செய்யலாம். மேலும் விபரங்களுக்கு: ப.ஓதிச்சாமி, 97894 15898.

**தென்னையில் மதிப்புக்கூட்டிய பொருட்களை தயாரித்தல்:**

பதிவு செய்த நாள் : ஜூன் 30,2010,00:00 IST



---

விவசாயிகளுக்கு உதவும் வகையில் தொழில்நுட்ப மிஷன் எனப்படும் திட்டத்தின் மூலம் நிதி உதவி வழங்குகிறது தென்னை வளர்ச்சி வாரியம். மானியத்தோடு பயிற்சியும் வழங்க ஏற்பாடு செய்கிறார்கள். அக்மார்க் தரத்தில் தேங்காய் எண்ணெய், தேங்காய் பவுடர் போன்றவை உற்பத்தி செய்து கொட்டாங்குச்சியை (சிரட்டை) பயன்படுத்தி பொருட்கள் செய்து ஆக்டிவேட்டட் கார்பன் தயாரிப்பது, இளநீரில் வினிகர் தயாரிப்பது, இளநீரை பாக்கெட்டில் அடைத்து விற்பனை செய்வது, தேங்காய் உலர்த்தும் இயந்திரம் வாங்குவது என்று பல்வேறுவிதமான செயல்களுக்கு நிதிஉதவி வழங்கப்படுகிறது. மேற்சொன்னவை தவிர, புதிதாக தென்னை சார்ந்த பொருட்களை யார் தயாரிப்பதாக இருந்தாலும் நிதி உதவி கிடைக்கிறது. அதிக பட்சமாக ரூ.50 லட்சம் வரை மானியமாக வழங்குகிறார்கள். தனிப்பட்ட விவசாயிகளுக்கும் விவசாய குழுக்களுக்கும் இந்த சலுகைகள் வழங்கப்படுகிறது. தென்னை வளர்ச்சி வாரிய அதிகாரிகள் விவசாயிகளின் பண்ணையை நேரடியாக பார்வையிட்டு உரிய தகுதிகள் இருக்கும் பட்சத்தில் நிதி உதவி வழங்குவார்கள். தென்னை சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்பவர்கள், கருத்தரங்கு மற்றும் கண்காட்சிகளில் அரங்கு அமைத்து அவற்றை விற்பனை செய்யவும் நிதிஉதவி வழங்கப்படுகிறது. தனி விவசாயிக்கு ரூ.10 லட்சம் வரையிலும், விவசாயக் குழுக்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.25 லட்சமும் மானியமாக வழங்கப்படுகிறது.

இந்த திட்டம் மூலம் நிதி உதவி பெற விரும்புபவர்கள் கொச்சியில் உள்ள தென்னை வளர்ச்சி வாரியத்தை தொடர்பு கொள்ளலாம். "சேர்மன், கோகனட் டெவலப்மென்ட் போர்டு, கேரளா பவன், கொச்சின்-682 011. 0484-237 6265, 237 7267, 237 6553, 237 5266.

**நன்னீர் இறால்**

பதிவு செய்த நாள் : ஜூன் 30,2010,00:00 IST

சென்னை மீன்வள ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையத்தில் நன்னீர் இறால் வளர்ப்புத் தொழில்நுட்ப பயிற்சி ஜூலை 14 மற்றும் ஆகஸ்ட் 10ம் தேதிகளில் நடைபெறுகிறது. முன்பதிவு செய்பவர்களுக்கு

முன்னுரிமை வழங்கப்படுகிறது. தொடர்புக்கு: பேராசிரியர், மீன்வள ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம், கால்நடை நலக்கல்வி மையம், மாதவரம் பால்பண்ணை, சென்னை-51. 044-2555 6750.

-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 30,2010,00:00 IST

தென்னையில் ஊடுபயிராக அசோலா  தழைச்சத்தை சேர்க்கும் நீர்பச்சை பாசியான அசோலா பொதுவாக குளம், குட்டை, கால்வாய், நெல்வயல்களில் மிதக்கின்ற நீர் நுண்தாவரம். பச்சை நுண்ம குச்சியான அனபீனா அசோலாவை தன்னிடம் ஒருமித்த இணைவாக அதனின் மேற்புற இலை இடுக்குகளில் கொண்டு உள்ளது. வளிமண்டல தழைச்சத்தை பச்சை நுண்ம குச்சி, அசோலாவில் சேர்த்துக்கொள்கிறது. அசோலா நீர் நுண்தாவரம் 0.2-0.3 சதம் தழைச்சத்தைக் கொண்டுள்ளது. (ஈர எடை அடிப்படையில்) எனவே அதனின் இதழ் இலைகள் செழிப்பான பசுந்தாள் உரமாக உள்ளது.

உற்பத்தி பெருக்கம்: அசோலாவானது வருடம் முழுவதும் வளரும் தன்மை உடையது. தென்னை மரங்களுக்கிடையே குழிகள் வெட்டி ஊடுபயிராக அசோலா வெற்றிகரமாக வளர்க்கப்படுகிறது. தென்னை நீலபச்சை பாசிக்கு தேவையான நிழலைத் தருகிறது. தென்னையின் அடிப்பகுதியிலிருந்து 5 அடி தள்ளி 6 அடி து 36 அடி து 3 அடி அளவுள்ள குழிகள் எடுக்க வேண்டும். இதுபோன்று 2 குழிகள் 2 அடி இடைவெளியில் வெட்டவேண்டும். ஒரு கிலோ புதிய பசுஞ்சாணம் குழியில் இட்டு நீர்விட வேண்டும். மேலும் நீர் அளவை 0.5 அடியாக வளர்க்கும் காலம் முழுவதும் நிலைப்படுத்திக் கொள்ள வேண்டும். சூப்பர் பாஸ்பேட் கார்போபியூரான் 3 சதம் குருணை 15 கிராம் அடியுரமாக குழியில் இட்டு நீர்விட்டு கிளறி வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு குழிக்கு புதிய அசோலா இலை இதழ்கள் 100 கிராம் வீதம் வளர் இடுபொருளாக இடவேண்டும். பிறகு அசோலா வளர்ந்து உற்பத்தியாகும் புதிய உயிர்பெருக்க நீலபச்சை பாசியானது இட்ட 15 நாட்களுக்குப் பின் நீர்ப்பரப்பை மூடிவிடும். உயிர்பெருக்கமடைந்த நிலையில் அசோலாவை அறுவடை செய்து நெல்வயல்களுக்கு இடலாம். ஒவ்வொரு குழியிலும் 3 கிலோ அசோலாவை அறுவடை செய்யலாம். அறுவடை செய்யும் போது சிறு அளவிலான அசோலாவை (100 கிராம்) குழியில் அப்படியே விட்டு அடுத்த வளர்ப்பிற்கு வளர் இடுபொருளாக பயன்பட வழிவகுக்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட சூப்பர்பாஸ்பேட் மற்றும் கார்போ பியூரான் 3 சதக்குருணை திரும்பவும் அடுத்தடுத்த அசோலா வளர்ப்பிற்கு கொடுக்கப்பட வேண்டும். இம்முறையில் அசோலா வளர்ப்பதால் அருகாமையிலுள்ள தென்னையின் வளர்ச்சி, மகசூல் பாதிப்புஏற்படுவதில்லை. எனவே விவசாயிகள் அசோலா மற்றும் நீலபச்சை பாசியை மலிவாக உற்பத்தி செய்து சொந்த பயன்பாட்டிற்கும் பிற விவசாயிகளுக்கும் விற்று பயன்பெறலாம். (தகவல்: த.அருள்ராஜன், கா.ராஜப்பன், சி.நடராஜன், தென்னை ஆராய்ச்சி நிலையம், வேப்பங்குளம்-614 906)

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**வெளிமாநிலங்களில் இருந்து வரும் லாரியின் வாடகை உயர்வு அரிசி, கோதுமை, மைதா, பருப்பு வகைகள் விலை உயரும் அபாயம் சர்க்கரை, பூண்டு, புளி, ஏலக்காய் விலை உடனடியாக அதிகரிப்பு**

---

*சென்னை, ஜூன்.30–*
*வெளிமாநிலங்களில் இருந்து வரும் லாரி வாடகை உயர்வதால் அரிசி, கோதுமை, மைதா, பருப்பு வகைகள் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சர்க்கரை, பூண்டு, புளி, ஏலக்காய் விலை உடனடியாக உயர்ந்துள்ளது.*
*பொதுமக்கள் குமுறல்*
*அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வால் எப்படி வாழ்க்கை நடத்துவது என்று பொதுமக்கள் குமுறிக்கொண்டிருக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் பெட்ரோல்–டீசல் விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளது அனைத்து மளிகை பொருட்களின் விலையும் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. லாரி வாடகையை காரணம் காட்டி சில்லரை மளிகை கடைகளில் தங்கள் விருப்பம்போல விலையை உயர்த்தி விற்பனை செய்வார்கள் என்ற அச்சமும் பொதுமக்களிடையே ஏற்பட்டு உள்ளது. மத்திய அரசு கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பு வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்ய தடைவிதித்தது. இதனால் அரிசி விலை மேலும் உயராமல் ஓரளவு கட்டுப்பாட்டில் இருப்பதாக அரிசி வியாபாரிகள் கருதுகிறார்கள். இது மட்டும் அல்லாமல் ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டுக்கு அதிக அளவில் அரிசி இறக்குமதியாவதும் அரிசி விலை அபரிமிதமாக உயரவில்லை என்பது வியாபாரிகளின் கருத்து ஆகும். இந்த சூழ்நிலையில் பெட்ரோல்–டீசல் விலை உயர்வின் எதிரொலியாக வெளிமாநிலங்களில் இருந்து வரும் லாரிகளின் வாடகையை உயர்த்த லாரி அதிபர்கள் முடிவு செய்துள்ளதாக தெரிகிறது. இதனால் கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் இருந்து சென்னைக்கு வரும் லாரி வாடகை ரூ.500 வரை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*
*அரிசி விலை உயரும்*
*லாரி வாடகை உயர்வால் தமிழ்நாட்டில் அரிசி விலை கிலோவுக்கு ஒரு ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரை உயரும் என்று வியாபாரிகள் எதிர்பார்க்கிறார்கள். அரிசி, மிளகாய் வத்தலை தவிர அனைத்து மளிகை பொருட்களுக்கும் வெளிமாநிலங்களை சார்ந்துதான் தமிழக மக்கள் இருக்கவேண்டிய நிலை உள்ளது. இப்படிபட்ட நிலையில் லாரி வாடகை உயர்வு வியாபாரிகளையும் பொதுமக்களையும் பயமுறுத்தி வருகிறது. கடந்த சில நாட்களாக விலை குறைந்துவந்த சர்க்கரை, பாமாயில், பருப்புவகைகள் விலை மீண்டும் உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. குஜராத், மராட்டியம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இருந்துதான் பருப்புவகைகள் இறக்குமதி செய்யவேண்டியது உள்ளது. இந்த மாநிலங்களில் இருந்து சென்னைக்கு வரும் லாரி வாடகை ரூ.5 ஆயிரம் வரை உயருகிறது. துவரம் பருப்பு கடந்த சில மாதங்களுக்கு முன்னால் கிலோ ரூ.100 வரை உயர்ந்தது. இப்போது படிப்படியாக குறைந்து இன்றைய நிலவரப்படி ஒரு கிலோ முதல் ரக துவரம் பருப்பு ரூ.65–க்கு விற்பனையாகிறது. லாரி வாடகையால் துவரம் பருப்பு, கடலை பருப்பு, உளுத்தம்பருப்பு கிலோவுக்கு ஒருரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரை அதிகரிக்கும் என்று அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் தெரிவித்தார். இதேபோல விலை குறைந்துவந்த பாமாயில் ரவை,*

கோதுமை, மைதா விலையும் உயரும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஏலக்காய் கிலோ ரூ.2 ஆயிரம்

மத்திய அரசு அனைத்து மில்களுக்கும் கடந்த ஆண்டு 17 லட்சம் டன் சர்க்கரை ஒதுக்கீடு செய்தது. அடுத்த மாதம் குறைந்த அளவில் அதாவது 13 லட்சம் முதல் 14 லட்சம் மட்டுமே மத்திய அரசு சர்க்கரை ஒதுக்கீடு செய்யும் என்று எதிர்பார்க்கிறார்கள். இதனால் கடந்த மாதம் 100 கிலோ மூட்டை சர்க்கரை ரூ.2,650–க்கு விற்பனையாது, தற்போது ரூ.2,750 ஆக உயர்ந்துள்ளது. கடந்த வாரம் ஒரு கிலோ மலைப்பூண்டு ரூ.150–க்கு விற்பனையானது, ரூ.200 ஆகவும், பெரிய பூண்டு ரூ.90–க்கு விற்பனையானது, ரூ.100 ஆகவும், சிறிய பூண்டு ரூ.60–க்கு விற்பனையானது, ரூ.80 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. கடந்த வாரம் ஒரு கிலோ முதல் ரக புளி ரூ.60–க்கு விற்பனையானது, ரூ.70 ஆகவும், இரண்டாம் ரக புளி ரூ.40–க்கு விற்பனையாது, ரூ.50 ஆகவும் அதிகரித்துள்ளது. ஏலக்காய் ஒரு கிலோ ரூ.1500–க்கு விற்பனையானது, ரூ.2,000 ஆகவும், முந்திரி பருப்பு ஒரு கிலோ ரூ.350–க்கு விற்பனையானது, ரூ.400 ஆகவும் விலை உயர்ந்துள்ளது.

**கேரளாவில் விவசாய நிலங்களை பாதிக்கும் மரபணு விதைகளை அனுமதிக்க மாட்டோம் முதல்–மந்திரி அச்சுதானந்தன் பேச்சு**

பெரும்பாவூர்,ஜூன்.30–

கேரளாவில் விவசாய நிலங்களை பாதிக்கும் மரபணு விதைகளை அனுமதிக்க மாட்டோம் என்று முதல்–மந்திரி அச்சுதானந்தன் கூறினார்.

அடிக்கல் நாட்டு விழா

எர்ணாகுளம் மாவட்டம், அங்கமாலி அருகே அத்தானி என்ற இடத்தில் கேரள அக்ரோ மெஷினரி கார்ப்பரேஷன்(காம்கோ) என்ற நிறுவனம் சார்பில் டிராக்டர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைய இருக்கிறது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா நடந்தது. விழாவுக்கு விவசாய மந்திரி முல்லக்கரா ரத்னாகரன் தலைமை தாங்கினார்.

விழாவில் வருவாய் துறை மந்திரி கே.பி.ராஜேந்திரன், மீன்வளத்துறை மந்திரி சர்மா, கே.பி.தனபாலன் எம்.பி., பிளாக் பஞ்சாயத்து தலைவர் பி.ஜே.ஜோஸ், நெடும்பாஞ்சேரி பஞ்சாயத்து தலைவி அஜிதா, மல்லிகா, லட்சுமணன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

விழாவுக்கு கேரள முதல்–மந்திரி அச்சுதானந்தன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு புதிய டிராக்டர் தொழிற்சாலைக்கான அடிக்கல்லை நாட்டினார். அப்போது அவர் கூறியதாவது:–

12 பொதுத்துறை நிறுவனங்களுக்கு லாபம்

கேரளாவில் காம்கோ 27 இடங்களில் செயல்பட்டு லாபம் ஈட்டி வருகிறது. மாநிலத்தில் இடதுசாரி அரசு ஆட்சிக்கு வந்தவுடன் 12 பொதுத்துறை நிறுவனங்கள் லாபம் ஈட்டின. ஆனால் தற்போது 32 பொதுத்துறை நிறுவனங்கள் லாபத்துடன் இயங்கி வருகிறது.

இந்த பகுதியில் புதிய டிராக்டர் தயாரிக்கும் தொழிற்சாலைக்காக அடிக்கல் நாட்டு விழா நடைபெறுகிறது. இதில் மனமகிழ்ச்சியுடன் கலந்து கொள்கின்றேன். இந்த தொழிற்சாலை செயல்பாட்டுக்கு வரும் போது விவசாய துறை மேன்மேலும் வளர்ச்சி பெறும்.

தொழிற்சாலை தேவையில்லை

பெரிய நிறுவனங்கள் தொழில் தொடங்கினால் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற எண்ணத்தில் தான் அதற்கு அனுமதி கொடுத்து வருகின்றோம். அப்படி கொடுத்தது தான் பிளாச்சிமடையில் அமைந்த ஒரு குளிர்பான தொழிற்சாலை. ஆனால் அந்த தொழிற்சாலையால் வெளியேற்றப்படும் கழிவு நீரால் விவசாய நிலம் பாதிக்கப்பட்டு பொதுமக்கள் போராட்டம் நடத்தினார்கள். இதனால் அந்த தொழிற்சாலை மூட நடவடிக்கை எடுத்தோம். இதன் மூலம் அரசுக்கு 216 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது.


இருந்த போதிலும் மக்கள் நலனில் அக்கறை கொண்டு நிலத்தடி நீரை அல்லது விவசாய நிலங்களை பாதிக்கும் எந்த தொழிற்சாலைகளுக்கும் அனுமதி அளிக்க மாட்டோம். அதனால் கிடைக்கும் வளர்ச்சி தேவையில்லை.

மரபணு விதைகளுக்கு தடை

கேரளாவில் விவசாய துறையில் அதிக உற்பத்தி செய்ய பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அதற்காக அதிக உற்பத்திக்காக மரபணு விதைகள் பயன்படுத்துவதால் விவசாய

*நிலங்கள் நாளடைவில் தரிசு பூமியாக மாறும் நிலை ஏற்பட்டால் அதை அனுமதிக்க மாட்டோம். இது குறித்து விரிவான ஆய்வு செய்து இறுதி முடிவு எடுப்போம். இவ்வாறு முதல்–மந்திரி அச்சுதானந்தன் கூறினார்.முன்னதாக விழாவிற்கு வந்தவர்களை காம்கோ நிர்வாக இயக்குனர் ரகுநாத் வரவேற்றார். முடிவில் தலைவர் சாமுணன் நன்றி கூறினார்.இதை தொடர்ந்து பெரும்பாவூர் அருகே உள்ள வாழக்குளம் புதிய பஞ்சாயத்து கட்டிடத்தை முதல்–மந்திரி அச்சுதானந்தன் திறந்து வைத்து பேசினார். இந்த நிகழ்ச்சியில் சாஜூ போல் எம்.எல்.ஏ., மோனாய் எம்.எல்.ஏ., உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.*

***சாதகமான பருவநிலை, நல்ல விலை கிடைப்பதால் ஏலக்காய் உற்பத்தி 20% வளர்ச்சி காணும்***



*பி கே கிருஷ்ணகுமார்*
*கொச்சி*
*சென்ற பருவத்தில் ஏலக்காய் விலை மிகவும் அதிகரித்து இருந்தது. இதனால் கேரளாவில் உள்ள பல விவசாயிகள் ஏலக்காய் சாகுபடியில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர். இதனையடுத்து வரும் ஜூலை மாதத்திலிருந்து அறுவடைக்கு தயாராக உள்ள ஏலக்காய் உற்பத்தி, சென்ற பருவத்தை விட நடப்பு பருவத்தில் 20 சதவீதம் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*
*11,000 டன்*
*சென்ற பருவத்தில் நாட்டின் ஏலக்காய் உற்பத்தி 11,000 டன் ஆக இருந்தது. இச்சூழ்நிலையில் அதிக அளவில் ஏலக்காய் உற்பத்தியாகும் கவுதமாலாவில் உற்பத்தி குறைந்து போயுள்ளது. இதனால் அந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்து வந்த பல நாடுகள் இந்தியாவின் பக்கம் திரும்பி உள்ளன. மேலும் உள்நாட்டிலும், சர்வதேச சந்தையிலும் ஏலக்காய்க்கான தேவைப்பாடு நல்ல அளவில் மேம்பட்டு உள்ளது. கடந்த ஒரு சில மாதங்களாக ஏலக்காய் சாகுபடியாகும் பகுதிகளில் நல்ல அளவில் மழை பொழிவு இருந்து வருகிறது. இதுபோன்ற காரணங்களால் சென்ற ஆண்டைவிட நடப்பு ஆண்டில் ஏலக்காய் உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரிக்கும் என ஏலக்காய் பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தும் கூட்டுறவு சங்கத்தின் பொது மேலாளர் பி.சி. புன்னூஸ் தெரிவித்தார்.*
*விலை*
*சென்ற பருவத்தில், ஒரு கிலோ ஏலக்காய் விலை மிகவும் அதிகபட்சமாக ரூ.1,700 வரை சென்றது. பின்பு ரூ.1,500–ல் நிலைபெற்றது. இருப்பினும் நடப்பு ஆண்டில், அறுவடைக்கு பிறகு, ஒரு கிலோ ஏலக்காய் விலை ரூ.800 முதல் ரூ.1,000 வரைதான் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இந்த விலையே விவசாயிகளுக்கு நல்ல அளவில் ஆதாயம் ஈட்டித் தரும் என ஏலக்காய் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் செயலாளர் கே.கே. தேவாசியா கூறினார்.*
*இடுக்கி மாவட்டம்*
*கேரள மாநிலத்தில், அதிக அளவில் ஏலக்காய் சாகுபடியாகும் இடுக்கி மாவட்டத்தில் மட்டும் 5 லட்சம் தொழிலாளர்கள், சுமார் 35,000 ஹெக்டேரில் ஏலக்காய் சாகுபடியில் ஈடுபட்டு*

வருகின்றனர்.
கவுதமாலா நாட்டில் ஏலக்காய் உற்பத்தி குறைந்து போனதால், சென்ற ஆண்டில் நம்நாட்டின் ஏலக்காய் ஏற்றுமதி 1,975 டன்னாக மிகவும் அதிகரித்து இருந்தது. இது, கடந்த 2008–09–ஆம் ஆண்டில் 750 டன்னாக இருந்தது. சென்ற ஆண்டில் சவுதி அரேபியாவிற்கு 1,118 டன்னும், ஐக்கிய அரபு குடியரசு நாடுகளுக்கு 296 டன்னும் ஏலக்காய் ஏற்றுமதி ஆனது என்பது குறிப்பிடத்தக்கது.

**குன்னூரில் லாரிகள் வேலைநிறுத்தம் வாபஸ்: 5 லட்சம் கிலோ தேயிலை தூள் வெளிமாநிலம் கொண்டு செல்லப்பட்டது**

குன்னூர், ஜூன்.30–
குன்னூரில் லாரிகள் வேலை நிறுத்தம் வாபஸ் காரணமாக தேங்கி கிடந்த தேயிலை தூள்களில் 5 லட்சம் கிலோ தூள் வெளி மாநிலம் கொண்டு செல்லப்பட்டன.
தேயிலை ஏலம்
நீலகிரி மாவட்டத்தில் உற் பத்தியாகும் தேயிலை தூள் குன்னூர் தேயிலை ஏல மையத்திற்கு கொண்டு வரப் படுகிறது. வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் நடைபெறும் தேயிலை ஏலத்தில் உள் நாட்டு வர்த்தகர்களும், வெளிநாட்டு வர்த்தகர்களும் பங்குபெற்று ஏலத்தில் தேயிலை தூளை எடுக்கின்றனர்.
ஏலம் எடுக்கப்படும் தேயிலை தூள் குன்னூரில் உள்ள குடோன்களில் வைக் கப்பட்டு அங்கிருந்து வெளி மாநிலங்களுக்கும், ஏற்றுமதி செய்வதற்காக துறைமுகங் களுக்கும் லாரிகள் மூலம் கொண்டு செல்லப்படுகிறது.
வேலை நிறுத்தம்
2 ஆண்டுகளுக்கு ஒரு முறை லாரி உரிமையாளர்கள் சங்கத் திற்கும், சாலை போக்குவரத்து சங்கத்திற்கும் வாடகை ஒப்பந்தம் போடப்படுகிறது. பெட்ரோல், டீசல் விலை உயர்வு காரணமாக லாரி வாடகையை உயர்த்தி தர வேண்டும் என்று லாரி உரிமையாளர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.இந்த கோரிக்கை காலம் தாழ்த்தப்படவே, லாரி உரிமை யாளர்கள் தேயிலை பாரம் ஏற்ற தங்கள் லாரிகளை அனுப்பாமல் கடந்த 21–ந் தேதி முதல் வேலை நிறுத்தத் தில் ஈடுபட்டனர்.
விலை வீழ்ச்சி
லாரிகள் வேலை நிறுத்தம் காரணமாக பல லட்சம் கிலோ தேயிலை தூள் குடோன்களில் தேங்கியது. ஏற்கனவே தேயிலை உற்பத்தி அதிகரித்த காரணத்தால், தேயிலை தூளின் விலையில் சரிவு ஏற் பட்டது.இதனை தொடர்ந்து பச்சை தேயிலைக்கும் விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்து வந்தது. தேயிலை பாரம் ஏற்றும் லாரிகள் வேலை நிறுத்தம் காரணமாக தேயிலை தூள் தேக்கத்தால் பச்சை தேயிலைக்கு மேலும் விலை சரிவடையும் அபாயம் நிலவியது.
3 கட்ட பேச்சுவார்த்தை
இதனை தொடர்ந்து தேயிலை பாரம் ஏற்றும் லாரி களின் வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கை சிறு விவசாயிகள், தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் சமூக நல அமைப்பினர் கோரிக்கை விடுத்தனர்.
இதனை தொடர்ந்து குன்னூர் ஆர்.டி.ஓ. ராஜூ முன்னிலையில், 3 கட்ட பேச்சுவார்த்தை நடைபெற் றது. இந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதால் தேயிலை பாரம் ஏற்றும் லாரிகளின் வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்தது.
5 லட்சம் கிலோ
கடந்த 28–ந் தேதி முதல் குன்னூரில் உள்ள தேயிலை குடோன்களில் வைக்கப் பட்டு இருந்த

*தேயிலை தூள் லாரிகள் மூலம் வெளி மாநிலங் ளுக்கும், துறை முகங்களுககும் கொண்டு செல்லப்பட்டது. நேற்று வரை 50 பாரம் கொண்ட 5 லட்சம் கிலோ தேயிலை தூள் வெளி மாநிலங் களுக்கு லாரிகள் மூலம் கொண்டு செல்லப்பட்டது.*

விளைச்சல் குறைவு காரணமாக

# மலை போல் உயரும் கேரட் விலை

ஊட்டி, ஜூன்.30-

விளைச்சல் குறைவு காரணமாக கேரட் விலை மலை போல் உயர்ந்து வருகிறது.

**விவசாயிகள்**

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விலை வீழ்ச்சி காரணமாக, விவசாயிகள் காய்கறி விவசாயத்துக்கு மாறினார்கள். இதன்படி தேயிலை விவசாயத்துக்கு அடுத்த படியாக அதிகமாக காய்கறி விவசாயத்தில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஊட்டி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் விவசாயிகள் கேரட், பீட்ரூட், முட்டை கோஸ், காளிபிளவர், மேரக்காய் போன்றவற்றை பயிரிட்டு வருகிறார்கள். அறுவடை செய்யப்படும் காய்கறிகளை விவசாயிகள் ஊட்டி மார்க்கெட், கூட்டுறவு காய்கறி விற்பனை மண்டி, மேட்டுப்பாளையம் காய்கறி மண்டி போன்றவற்றுக்கு விற்பனைக்காக கொண்டு செல்கிறார்கள். இதன்படி விற்பனையாகும் காய்கறிகள் வெளியூர்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும் கொண்டு செல்லப்படுகிறது.

**விலை உயர்வு**

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக கேரட் விலை மலை போல் உயர்ந்து வருகிறது. விளைச்சல் குறைவு காரணமாக கேரட் விலை அதிகரித்து வருவதாக விவசாயிகளும், கேரட் மொத்த வியாபாரிகளும் தெரிவித்து உள்ளனர்.

இது தொடர்பாக ஊட்டி மார்க்கெட் மொத்த வியாபாரி நாகராஜ் கூறியதாவது:-

ஊட்டி மார்க்கெட்டுக்கு கொண்டு வரப்படும் கேரட், திருச்சி, சென்னை, மதுரை, நெல்லை, மைசூர், சேலம், தருமபுரி உள்பட பல்வேறு ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பெய்த பலத்த மழையினால் ஏற்பட்ட சேதத்தில் கேரட் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதன் எதிரொலியாகவே தற்போது கேரட் விளைச்சல் மிகவும் குறைவாக உள்ளது. இதன் காரணமாக விலை அதிகரித்து உள்ளது.

கடந்த மாதம் முதல் தர கேரட் ஒரு கிலோ ரூ.25 முதல் ரூ.30 விரை விற்பனையானது. தற்போது முதல் தர கேரட் ஒரு கிலோ ரூ.35 முதல் ரூ.40 வரை விற்பனையாகிறது. இந்த விலை இன்னும் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளது.

மேலும் ஒரு மூடைக்கு லாரி வாடகையாக ரூ.50 கொடுத்து வியாபாரிகள் வாங்குகிறார்கள். ஆனால் பெட்ரோல், டீசல் விலை உயர்ந்துள்ளதால் லாரி வாடகை இன்னும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இதன் காரணமாக கேரட் விலை மேலும் உயருவதற்கு வாய்ப்புகள் இருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

இது தொடர்பாக ஊட்டி உழவர் சந்தை அதிகாரி கூறும் போது, உழவர் சந்தைக்கு இன்று (நேற்று) வரை முதல் தர கேரட் அவ்வளவாக வர வில்லை. இதன் காரணமாக ஒரு கிலோ கேரட் ரூ.18 முதல் ரூ.20 வரை விற்பனை செய்யப்பட்டது. முதல் தர கேரட் விற்பனைக்கு வந்தால், அதன் விலை அதிகரிக்கும் என்று கூறினார்.



ஊட்டி மார்க்கெட்டில் விவசாயிகளால் விற்பனைக்காக கொண்டு வரப்பட்ட கேரட் தரம் பிரிக்கப்படுவதை படத்தில் காணலாம்.